### ஆட்சிக்கு முன் – ஆட்சிக்குப் பின் என இரட்டை வேடம் போடுவது போல

# மீனவர் பிரச்சினையிலும் Sofa Model அரசு ஏமாற்று வேலையில் ஈடுபடுவதா?

## இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக மீட்க உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.15-

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

ராமேஸ்வரம் மீனவர்கள் 9 பேரை இலங்கை ராணுவம் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது கண்டிக்கத்தக்கது.



இந்த பிரச்சினை தொடர்பாக ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு இந்த அரசு சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வருகின்றன.

மீனவர் பிரச்சினையில், 'மானே தேனே பொன்மானே என்று கடிதம் எழுதினால் மட்டும் போதுமா உணர்வுப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டாமா?' என்று ஆட்சிக்கு வருவதற்கு முன்பு நம்மை பார்த்து சொன்னவர்கள், இப்போது கடமைக்கு கடிதம் மட்டும் எழுதுவது ஏன்?

ஆட்சிக்கு முன் ஆட்சிக்குப் பின் என ஒவ்வொரு விஷயத்தி லும் இரட்டை வேடம் போடுவது போல, மீனவர் பிரச்சினையிலும் இந்த Sofa Model அரசு ஏமாற்று வேலைகளில் ஈடுபடக்கூடாது.

இவர்கள் சொன்ன அந்த உணர்வுப்பூர்வமான நடவடிக்கையை உடனடியாக மேற்கொண்டு, இலங்கை சிறையில் வாடும் தமிழ்நாட்டு மீனவர் களை மீட்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு புகழ்வணக்க பொதுக்கூட்டம் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திண்டுக்கல் ஐ.லியோனி, ஆர்.எஸ்.பாரதி, மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் பா.பெஞ்சமின் , தாயகம் கவி.ஏ.எம்.வி.பிரபாகரராஜா.கவிஞர் காசிமுத்துமாணிக்கம்.ரத்னாலோகேஷ்வரன், பாலவாக்கம் மு. மனோகரன். எஸ். பாஸ்கர்.வாசுகிபாண்டியன். மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன். எம்.சி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, எஸ்..அருணாசலம் , வ.செல்வக்குமார் எம்.சி, எஸ்.பி.அருள். பா.அருண்குமார்,செ.ரவி, ச.சங்கர்கணேஷ் எம்.சி, சீ.பாலமுருகன் பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள்: பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ் பாரதி,எம்.சி, கே.ராஜி..எம்.சி, ஆ.மாலினி.எம்.சி, ம.உதயகுமார், என்.ரவி, வட்ட கழக செயலாளர்கள் எஸ்..ரமேஷ்ராஜ், த.ரமேஷ், ஜெ.பாஸ்கரன், தி.சார்லஸ், ஆ.செல்வம், எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி. அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், எம்.இ.ஸ்டாலின், எம்.சி., ப.ஆலன், எம்.ரூபன், மதுரவாயல் தெற்கு – வடக்கு பகுதி மாமன்ற உறுப்பினர்கள்: செல்விரமேஷ், எம்.சி., ஹேமலதாகணபதி, எம்.சி., ரமணிமாதவன், எம்.சி., மற்றும் மாவட்ட பிரதிநிதிகள்.தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் , மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள். அணிகளின் பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மதுரவாயல் தெற்கு, வடக்கு பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக சி.சுந்தர், க.கைலாசம், இரா.ராஜேந்திரன், நரேன் கணபதி ஆகியோர் நன்றியுரையாற்றினார்கள்.

---

### கொளத்தூர் கிழக்குப் பகுதியில் – பகுதிச் செயலாளர் ஐ.சி.எப். வ.முரளிதரன் தலைமையில்

# 'போராளி ஓய்வதில்லை' முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் - இலவச மருத்துவ முகாம்!

## மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. – இரா.கிரிராஜன் எம்.பி. துவக்கி வைக்கின்றனர்!

சென்னை, ஆக. 15-

சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் கிழக்கு பகுதியில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் மாபெரும் புகழரங்கம் போராளி 5"மக்கள் நலனே முதன்மையானது அதுவே கலைஞரின் எண்ணமானது" எனும் தலைப்பில் 16/08/2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி அளவில் சென்னை, செம்பியம் தீட்டி தோட்டத்தில் உள்ள செம்பியம் வியாபாரிகள் சங்கத்தில் பகுதிக் கழக செயலாளர் ஐ.சி.எஃப். வ.முரளிதரன் தலைமையில், பகுதிக் கழகச் செயலாளர் எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ் குமார், சரிதா மகேஷ் குமார், தேவ ஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், வானவில் விஜய், எஸ். தனசேகர், ஆர்.எஸ்.சித்திக், மா.அசோக் குமார், கே.பிரசாத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பி.பழனி, இலா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எம்.தாவுத், வி.எல்.டி. காமர்ஸ், இரா.தயாளன், எம்.சாக்ரடிஸ், பி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, பி.டி.சி.ரவி, கே.பி. ஆதவன், மணி. பி.ஊமைத்துறை, பி.சந்திரசேகர், ராஜன் என்ற பன்னீர்செல்வம், பா.அதிபதி, எம். ஜே.சி.பாபு, என்.ராமச்சந்திரன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், எம்.டி.தமிழ் செல்வன், எஸ்.முருகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மருத்துவ முகாமை முன்னாள் அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ, கழக சட்டதிட்ட திருத்தக் குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி. அவர்களும் துவக்கி வைத்துசிறப்பிக்கின்றார்கள்.

மேலும் இம்மாபெரும் மருத்துவ முகாமில் மேயர் பிரியா ராஜன்,டாக்டர் கலாநிதி வீராசாமி எம் பி. வழக்கறிஞர் தாயகம் கவி,அ. வெற்றி அழகன் ப.ரங்கநாதன், கே எஸ் ரவிச்சந்திரன் தமிழன் பிரசன்னா, கார்த்திக் மோகன், எஸ் மணி முடி, வே.உமாகாந்த், பி கே மூர்த்தி, எம் விஜயகுமார்,கே எஸ் எம். நாதன், என் பி எம் ஷேக் அப்துல்லா ஆர்.வரதன், தேடல். புருஷோத்தமன், மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன், ஜி எம் தேவன்,,இசட் ஆசாத், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ.ஜெயின், வே வாசு, செ. தமிழ்வேந்தன் எம் சாமி கண்ணு, சொ. வேலு, வி சுதாகர், எஸ் ராஜசேகர், டிஎஸ்பி ராஜகோபால், எம் டி ஆர் நாகராஜ், எஸ் முரளி .பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ் பன்னீர் செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், கோ மணி, ஏ,பி. பூர்ணிமா, ரமேஷ் (எ) நீல கண்டன் எம் இப்ராஹீம் கனி, இரா கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், ஜெ.பாலமுருகன்,க. வினோத் ,எஸ் தனசேகர், பா ஜெகதீஷ், ஜி. ஜே.பிரபு, ஆர்டி சங்கர் நானா,பி. ஸ்ரீராமுலு, நா ரஞ்சித் விஜயா லயன், ஜி தாமோதரன், கு கிருஷ்ணமூர்த்தி, பி. ஸ்ரீராமுலு, பி.விஜயகுமார், பா. பிரதீப் குமார் ,எல்.சம்பத் குமார், எம் விநாயகம்,ஆர் எஸ் சித்திக், ம.அசோக் குமார் , சுதா தீனதயாளன் ,ராஜேஸ்வரி டாக்டர் ஜி சாந்தகுமாரி, ஜி.வி. நாகவள்ளி, ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் வட்டக் கழக செயலாளர்கள் கே.ஜார்ஜ்குமார், என். பொன்முடி ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

---

### கோவையில் சக மாணவர்களால் கொலை செய்யப்பட்ட

# அமுதனின் பெற்றோருக்கு ஆறுதல்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்!

சென்னை, ஆக.15

கோவையில் சக மாணவர்களால் கொலை செய்யப்பட்ட கல்லூரி மாணவர் அமுதனின் பெற்றோரைத் தொடர்புகொண்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று ஆறுதல் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே சட்டசபையில் அமுதன் கொலை குறித்து கவன ஈர்ப்பு தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்தபோது, திங்கள் அன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதாக சபாநாயகர் தெரிவித்திருந்தார். "உதயநிதி சார்தான் நீதி பெற்று தர வேண்டும்" என்று அமுதனின் தாயாரும் உருக்கமாகத் தெரிவித்திருந்தார்.

இன்று அமுதனின் பெற்றோரைத் தொடர்புகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அமுதனின் மரணத்துக்குத் தன் ஆழ்ந்த இரங்கல்களையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

மேலும் திங்கள் அன்று சட்டசபையில் இந்த சம்பவம் குறித்து விரிவாகப் பேசுவதாகவும் அமுதனின் மரணத்துக்கு நீதி கிடைக்கும்வரை, அமுதனின் பெற்றோருக்கு உறுதுணையாக இருந்து போராடுவதாகவும் உறுதிபட தெரிவித்தார்.

---

### வட சென்னையில் கேந்திரிய வித்யாலயா பள்ளி அமைக்க

# இரயில்வே துறையிடமுள்ள நிலத்தை வழங்க கோரிக்கை!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஒன்றிய இரயில்வே துறை அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, ஆக. 15-

வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.



அக்கடிதத்தில் வட சென்னை நாடாளுமன்ற தொகுதியில் ஒரு கேந்திரிய வித்யாலயா பள்ளி துவங்க வேண்டும் என்னும் கோரிக்கை நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளது. இந்த பள்ளி அமைக்கத் தேவையான நிலத்தை வழங்கும்படி இரயில்வே நிர்வாகத்துக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதையும் தங்கள் நினைவுக்குக் கொண்டு வர விரும்புகின்றேன். மேலும் திருவொற்றியூர் சாத்தங்காடு, கிராமத்தில் இரயில்வேக்குச் சொந்தமான, 5 ஏக்கர் நிலம், இப்பள்ளி அமைப்பதற்குத் தக்க இடமாக ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளது என்பதையும், தங்கள் நினைவுக்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

இது குறித்து, 25.07.2021 அன்று தென்னிந்திய இரயில்வே மண்டலத்தின், பொது மேலாளருக்கு, மேற்படி நிலத்தை உடனடியாக வழங்குமாறு கேட்டு கொண்டேன். அதற்கு தென்கை இரயில்வேயின் பொது மேலாளர் இரயில்வே துறைக்கு, அந்த நிலம் தேவைப்படவில்லை என்றும், இரயில்வே துறையின் விதிகளுக்கு உட்பட்டு அந்த நிலத்தைத் தருவதாகவும் கூறியுள்ளார்.

எனினும், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள இந்த கோரிக்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. வட சென்னை மக்களும், மாணவர்களும், இவ்வாறு ஒரு கேந்திரிய வித்யாலயா பள்ளி அமைக்கப்பட வேண்டும் என்று காத்துக் கொண்டுள்ளனர். எனவே, சம்பத்தப்பட்ட தென்கை இரயில்வே அதிகாரிகளை இதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனே எடுக்குமாறு ஆணை இடவேண்டும், என இரயில்வே அமைச்சகமும், மேலும் கேந்திரிய வித்யாலயா சன்காதன் அதிகாரிகளும் உடனடியாக இரயில்வே துறை அதிகாரிகளுடன் இணைந்து, செயலாற்ற ஆணை இடக்கோரி, கல்வி அமைச்சகத்தையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி. அந்த கடிதத்தில்குறிப்பிட்டுள்ளார். மேலும் இக்கடிதத்தின் நகலை ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் திரு. பிராகியாத் ஜோஷி அவர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

---

### கோவை தனியார் கல்லூரியில் போதை கும்பலால் அடித்து கொலை செய்யப்பட்ட கள்ளக்குறிச்சி

# மாணவர் அமுதன் மரணத்திற்கு நீதி விசாரணை கேட்டு தி.மு.க. சார்பில் கண்டனப் பேரணி!

## மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கள்ளக்குறிச்சி, ஆக. 15

கோவை தனியார் கல்லூரியில் போதை கும்பலால் கொலை செய்யப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் அமுதனின் மரணத்திற்கு நீதி விசாரணை கேட்டு திமுக சார்பில் மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்எல்ஏ தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மாபெரும் கண்டன பேரணி நடைபெறுகிறது என ஒருங்கிணைந்த மாவட்ட கழகம் அறிவித்துள்ளது.



இதன் விவரம் வருமாறு:-

கோவை தனியார் இன்ஜினியரிங் கல்லூரியில் படித்து வந்த கள்ளக்குறிச்சியை சேர்ந்த ஆசிரியர் கென்னடி சுமதி ஆகியோரின் மகன் அமுதன் என்பவரை அதே கல்லூரியை சேர்ந்த மாணவர்கள் மற்றும் 20க்கும் மேற்பட்ட கும்பல் கத்தியால் குத்தியும், இரும்பு பைப்புகளால் அடித்தும் படுகொலை செய்யப்படுவதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும் தமிழ்நாட்டில் போதைப்பொருட்கள் விநியோகத்தை தடுக்க திராணியற்ற தவெக அரசை கண்டித்தும், ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தோழமைக் கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டண பேரணி,

தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில், வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் முன்னிலையில், நாளை (ஆகஸ்ட் 16 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணி அளவில் கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை முதல் மந்தகரை அண்ணா சிலை வரை பேரணி நடைபெறுகிறது என ஒருங்கிணைந்த கள்ளக் குறிச்சி மாவட்ட கழகம் அறிவித்துள்ளது,

ஆகவே இந்த கண்டன பேரணியில் தோழமைக் கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழகத்தின் மாநில, மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழகத்தின் உடன்பிறப்புகள், தொண்டர்கள், பொது மக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு கள்ளக்குறிச்சி மாணவர் அமுதனின் மரணத்திற்கு காரணமாக இருக்கும் போதை கும்பலையும் அதற்கு உறுதுணையாக இருப்பவர்களையும் கைது செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க போராட வேண்டும், ஆகவே அனைவரும் வருக ஆதரவு தருக என ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட திமுக சார்பில் அழைப்பு விடுத்துள்ளனர்.


